**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C.182/2024**
**Prosecution Witness : 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு.குணசேகரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு.பரசுராமன்** | **Calling** | : | |
| **Village** | : | **வாழைக்காய்பட்டி பிரிவு** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **30** |
| | | | **Dated** | : | **11.06.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**2 முதல் 5 எதிரிகள் ஆஜர். 1–ம் எதிரி ஆஜரில்லை. 1–ம் எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

<u>முதல் விசாரணை :–</u>

நான் திண்டுக்கல் மாவட்டம் வாழைக்காய்பட்டியில் வசித்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. 1–ம் எதிரி ராஜ் என்பவரையும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ராஜ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலும், மாமுண்டி என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலும், இரண்டு கைப்பற்றுதல் மகஜர்களிலும் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது இல்லை. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

கடந்த 28.11.2021ம் தேதி மதியம் 13.30 மணிக்கு நான் தோமையாபுரம் பேருந்து நிறுத்தம் அருகே வந்து கொண்டு இருந்ததேன் என்றும், அப்போது திண்டுக்கல் தாலுகா போலீசார் வாகனத் தணிக்கை செய்து கொண்டு இருந்தார்கள் என்றும், அந்த வழியாக TN 59 BD 6241 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் வந்த இவ்வழக்கு எதிகளான ராஜ் மற்றும் மாமுடி என்பவர்களை குற்ற வழக்கு சம்மந்தமாக பிடித்து விசாரணை செய்து, கைது செய்தார்கள் என்றும், எதிரி ராஜ் என்பவர் சாட்சிகளான என் முன்னிலையிலும், ராஜேஷ்குமார் முன்னிலையிலும் எவ்வித வற்புறுத்துதலும், துண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் வாழைக்காய்பட்டியைச் சேர்ந்த சின்ன முருகன் மற்றும் கார்த்திக் பாண்டி ஆகியோரிடம் ராஜ்குமார் நிலம் வாங்குவதற்காக முன்பணமாகக் கொடுத்த ரூ. 10 லட்சத்தைக் கேட்டு தகராறு ஏற்பட்டது என்றும், அதனால் இவ்வழக்கு எதிரிகள் அவர்களை தீர்த்துக்கட்ட வேண்டும் என்று சதிசெய்து, 28.11.2021ம் தேதி அதிகாலை 06.00 மணிக்கு எதிரிகள் இருசக்கர வானத்தில் வாழைக்காய்பட்டி பிரிவு அருகே உள்ள சின்னமுருகன் கறிக்கடைக்குச் சென்று ஆயுதங்களால் கார்த்திக் பாண்டியை செத்து தொலைடா என்று வெட்டிக் காயங்கள் ஏற்படுத்தினார் என்றும், தடுக்க வந்த சின்ன முருகனை ஆயுதங்களை காட்டி வெட்டி கொன்றுவிடுவோம் என்று கொலை மிரட்டல்

விடுத்தார்கள் என்றும், அங்கிருந்து இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றார் என்றும், எதிரி ராஜ் என்பவர் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதங்களை சிறுமலை ரோட்டில் தண்ணீரில் கழுவிவிட்டு, சிறுமலை பிரிவு அருகே, கிறிஸ்தவ கெபி பின்புறம் முற்புதரில் மறைத்து வைத்திருந்ததாகவும், தன்னை அழைத்துச் சென்றால் மறைத்து வைத்துள்ள ஆயுதங்களை எடுத்து ஆஜர் செய்வதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும், அன்றைய தினமே 17.30 மணிக்கு சிறுமலை பிரிவில் உள்ள கிறிஸ்தவ கெபி பின்புறம் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய இரண்டு அருவாள்களையும், இரண்டு கத்திகளையும் எடுத்து ஆஜர் செய்தார் என்றும், கைப்பற்றுதல் மகஜர்களில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், அன்றைய தினமே 15.30 மணிக்கு வழக்கின் மற்றொரு எதிரியான மாமுடி என்பவர் என் முன்னிலையிலும், ராஜேஷ்குமார் முன்னிலையிலும் எவ்வித வற்புறுத்துதலும், துண்டுதலும் இன்றி தன்னிச்சையாக ஓர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தில் வாழைக்காய்பட்டியைச் சேர்ந்த சின்ன முருகன் மற்றும் கார்த்திக் பாண்டி ஆகியோரிடம் ராஜ்குமார் நிலம் வாங்குவதற்காக முன்பணமாகக் கொடுத்த ரூ. 10 லட்சத்தைக் கேட்டு தகராறு ஏற்பட்டது என்றும், அதனால் இவ்வழக்கு எதிரிகள் அவர்களை தீர்த்துக்கட்ட வேண்டும் என்று சதிசெய்து, 28.11.2021ம் தேதி அதிகாலை 06.00 மணிக்கு எதிரிகள் இருசக்கர வானத்தில் வாழைக்காய்பட்டி பிரிவு அருகே உள்ள சின்னமுருகன் கறிக்கடைக்குச் சென்று ஆயுதங்களால் கார்த்திக் பாண்டியை செத்து தொலைடா என்று வெட்டிக் காயங்கள் ஏற்படுத்தினார் என்றும், தடுக்க வந்த சின்ன முருகனை ஆயுதங்களை

காட்டி வெட்டி கொன்றுவிடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும், அங்கிருந்து இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றார் என்றும், எதிரி ராஜ் என்பவர் சம்பவத்திற்கு பயன்படுத்திய ஆயுதங்களை சிறுமலை ரோட்டில் தண்ணீரில் கழுவிவிட்டு, சிறுமலை பிரிவு அருகே, கிறிஸ்தவ கெபி பின்புறம் முற்புதரில் மறைத்து வைத்திருந்ததாகவும், தன்னை அழைத்துச் சென்றால் மறைத்து வைத்துள்ள ஆயுதங்களை எடுத்து ஆஜர் செய்வதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும், அன்றைய தினமே 17.30 மணிக்கு சிறுமலை பிரிவில் உள்ள கிறிஸ்தவ கெபி பின்புறம் உள்ள முட்புதரில் மறைத்து வைத்திருந்த சம்பவத்திற்கு பயன்படுத்திய இரண்டு அருவாள்களையும், இரண்டு கத்திகளையும் எடுத்து ஆஜர் செய்தார் என்றும், கைப்பற்றுதல் மகஜர்களில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், அவர் ஓட்டி வந்த TN 59 BB 6241 பதிவு எண் கொண்ட ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தை ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார் என்றும் அதிலும் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும், அவர் ஆஜர் செய்த மேற்படி இருசக்கர வாகனத்தை 16.30 மணிக்கு தோமையாபுரம் பேருந்து நிறுத்தத்தில் கைப்பற்றுதல் மகஜரில் போலீசார் கைப்பற்றிக் கொண்டார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும் போலீசார் விசாரணையின்போது கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>** இல்லை.

**Taken down by me/before me in open court on 11.06.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.06.11 18:25:17 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**